# <u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

***OS.No.13/2008*** **Date: 18.03.2026**

***PW3* –** ராணியம்மாள்

<u>சாட்சி முன்னிலையானதின் பேரில் 2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

தாவா சொத்து என் வீட்டிலிருந்து 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. தாவா சொத்தை எனக்கு விபரம் தெரிந்த காலம் முதல் நாங்கள் அனுபவித்து வருகிறோம். அதில் 4 வீடுகள் உள்ளது. ஆனால் அந்த வீட்டை தாவா சொத்து விபரத்தில் காண்பிக்கவில்லை என்றால், எனக்கு தெரியாது. அந்த வீடுகளுக்கு மின் இணைப்பு உள்ளது என்றாலும், வீட்டு வரி செலுத்தப்படுகிறது என்றாலும், சரிதான். அதில் 2 ம் பிரதிவாதி கான்கிரீட் வீடு கட்டி குடியிருக்கிறார் என்றால், எனக்கு தெரியாது. தாவா சொத்தில் நாங்கள் அனுபவத்தில் உள்ளதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. பெரியானுக்கு நான் பேத்தி. 2 ம் பிரதிவாதி எனக்கு சித்தப்பா. சின்னான் எனக்கு பெரிய தாத்தா. அந்த சின்னான் 2 ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் ஒரு பகுதியை 30.1.1979 ல் விற்பனை செய்துள்ளார் என்றால், எனக்கு தெரியாது. அதேபோல் பெரியான் தனக்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட 30 செண்ட் நிலத்தை 23.01.1991 ல் 2 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார் என்றால், எனக்கு தெரியாது. அவ்வாறு கிரையம் வாங்கிய நிலத்தை 2 ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருகிறார் என்றால், சரியல்ல. அதேபோல் சென்னமாணிக்கம் என்பவர் தாவா சொத்தின் ஒரு பகுதியை இறுதி நிலை தீர்ப்பாணையில் பெற்று 2 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால், சரிதான். தாவா சொத்தில் அவரவர் பாகத்தில் ஆழ்துளை கிணறு வெட்டி மின் இணைப்பு பெற்று தென்னை மரங்கள் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல. தாவா சொத்தின் ஒரு பகுதியை தேசிய நெடுஞ்சாலைக்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால், சரிதான். வழக்குரை சொத்து விபரம் தவறானது என்றால், சரியல்ல. அதனால் தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. நாங்கள் செலுத்தியுள்ள கட்டணம் தவறு என்றால், சரியல்ல.

<u>24 முதல் 34 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

தாவா 1 ம் அயிட்ட சொத்தின் சர்வே எண் 660/1. அந்த சொத்து சின்னான் பெயரில் மட்டுந்தான் பி.வா.சா.ஆ.28 பட்டா உள்ளது என்றால், சரியல்ல. அதனால் சின்னான் வாரிசுகளுக்கு மட்டுந்தான் தாவா 1 ம் அயிட்ட சொத்தில் உரிமையுள்ளது என்றால், சரியல்ல. வா.சா.ஆ.19 ல் 24 முதல் 34 பிரதிவாதிகள் தரப்பினர்கள் இல்லையென்றால், சரிதான்.

குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம்/-ராணியம்மாள்

ஒப்பம்/- திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.